**நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.I, அரியலூர்**
**முன்னிலை: திருமதி. இரா. சங்கீதா சேகர், பி.ஏ.பி.எல்.,**
**நீதித்துறை நடுவர் எண்.I, அரியலூர்.**

**2026–ம் ஆண்டு ஜூன் 12 – ஆம் நாள் வெள்ளிக் கிழமை**
**C.C.No.43/2023**
**CNR No.TNAL040002482023**

அரசுக்காக
காவல் ஆய்வாளர்,
கயர்லாபாத் காவல்நிலையம்,
கு.எண்.115/2022. ... குற்றமுறையிடுபவர்.

/எதிர்/

1. முத்துசாமி, 43/26,
   த/பெ.வெங்கடாசலம்
2. மொசகாது @ வெங்கடாசலம், 69/26,
   த/பெ.முத்துசாமி
3. வளர்பிறை, 64/26,
   க/பெ.வெங்கடாசலம்

அனைவரும், கீழத் தெரு,
வெங்கடகிருஷ்ணாபுரம்,
அரியலூர் மாவட்டம். ... எதிரிகள்.

**குற்றம்** : 1,2,3 எதிரிகள் மீது பிரிவுகள் 341, 324 இ.த.ச.

**குற்றச்சாட்டுக்கள் வனையப்பட்டது** : 1,2,3 எதிரிகள் மீது பிரிவுகள் 341, 324 இ.த.ச.

**தீர்ப்பு** : முடிவாக, 1,2,3 எதிரிகள் மீதான பிரிவுகள் 341, 324 இ.த.ச. –ன் கீழ் எதிரிகள் குற்றவாளிகள் இல்லை என தீர்மானித்து கு.வி.மு.ச.பிரிவு 248(1)–ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது. எதிரிகள் எழுதி கொடுத்த பிணை முறி ஆவணம் மேல் முறையீட்டு காலத்திற்கு பிறகு ரத்தாகவேண்டியுள்ளது. இவ்வழக்கில் வழக்குச் சொத்துக்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. எனவே வழக்குச் சொத்து பற்றிய உத்தரவு இல்லை.

R SANGEETHA SEKAR
Digitally signed by R SANGEETHA SEKAR
Date: 2026.06.12 18:20:22 +0530

| வ. எண் | குற்றம்சாட்டப்பட்டவர் பற்றிய விளக்கம் | | | | |
|---|---|---|---|---|---|
| | பெயர் | தந்தை/ கணவரின் பெயர் | தொழில் | இருப்பிடம் | வயது |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1. | முத்துசாமி | த/பெ.வெங்கடாசலம் | கூலி | கீழத் தெரு, வெங்கடகிருஷ்ணாபுரம், அரியலூர் மாவட்டம். | 43 |
| 2. | மொசகாது @ வெங்கடாசலம் | த/பெ.முத்துசாமி | கூலி | கீழத் தெரு, வெங்கடகிருஷ்ணாபுரம், அரியலூர் மாவட்டம். | 69 |
| 3. | வளர்பிறை | க/பெ.வெங்கடாசலம் | கூலி | கீழத் தெரு, வெங்கடகிருஷ்ணாபுரம், அரியலூர் மாவட்டம். | 64 |

| தேதி | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| (7) | (8) | (9) | (10) | (11) | (12) | (13) | (14) |
| நிகழ்வு | புகார் | கைது (அ) சரணடை-ந்தது | ஜாமீன் விடுப்பு | சாட்சிகளின் விசாரணை செய்ய ஆரம்பித்த தேதி | சாட்சிகளின் விசாரணை செய்ய முடித்த தேதி | தண்டனை (அ) ஆணை | தாமதத்திற்கு விளக்கம் |
| 16.05.2022 | 27.05.2022 | 04.06.2022 | 04.06.2022 | 16.02.2023 | 10.06.2026 | 12.06.2026 | --- |

| வரிசை எண். | விளக்கம் | விவரம் | |
|---|---|---|---|
| 1. | குற்றம் சாட்டப்பட்டவர்களின் காவலில் வைக்கப்பட்ட காலம் | குற்றவாளி காவலில் வைக்கப்பட்ட தேதி | விடுவிக்கப்பட்ட விவரம் |
| | | ---- | ---- |
| 2. | நீதிமன்றத்தில் இறுதி அறிக்கையை தாக்கல் செய்த தேதி. | 06.03.2023 | |
| 3. | அமர்வு நீதிமன்றத்திற்கு வழக்கின் சமர்ப்பிக்கும் தேதி | இல்லை | |

R SANGEETHA SEKAR

Digitally signed by R SANGEETHA SEKAR
Date: 2026.06.12 18:20:31 +0530

<table>
<tr><td>4.</td><td>குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் பிரிவு 240 இன் கீழ் குற்றம் சாட்டப்பட்டவரை விசாரிக்கும் தேதி</td><td colspan="3">240 of Cr.P.C on 05.04.2023</td></tr>
<tr><td>5.</td><td>அனைத்து இதர மனுக்களையும் தாக்கல் செய்தல். Cr.P.C இன் 317 போன்ற வழக்கமான மனுக்கள் தவிர, மேல் நீதிமன்றங்களில் உள்ள சவாலின் முடிவுகள் உட்பட அவற்றின் முடிவுகள்</td><td colspan="3">இல்லை</td></tr>
<tr><td rowspan="6">6.</td><td rowspan="6">முதல் விசாரணை மற்றும் சாட்சிகளின் குறுக்கு விசாரணை தேதி</td><td>சாட்சிகள்</td><td>முதல் விசாரணை</td><td>குறுக்கு விசாரணை</td></tr>
<tr><td>அ.சா.1</td><td>16.02.2023</td><td>16.02.2023</td></tr>
<tr><td>அ.சா.2</td><td>16.02.2023</td><td>16.02.2023</td></tr>
<tr><td>அ.சா.3</td><td>18.06.2025</td><td>18.06.2025</td></tr>
<tr><td>அ.சா.4</td><td>18.06.2025</td><td>18.06.2025</td></tr>
<tr><td>அ.சா.5</td><td>10.06.2026</td><td>10.06.2026</td></tr>
<tr><td>7.</td><td>குற்றம் சாட்டப்பட்ட U/s இன் பரிசோதனை தேதி. 313(1)(b) Cr.P.C.</td><td colspan="3">11.06.2026</td></tr>
<tr><td rowspan="2">8.</td><td rowspan="2">இந்த தோற்றம் / தயாரிப்பில் தலைமறைவு விவரங்கள், சந்தர்ப்பம் இருக்கலாம்.</td><td colspan="2">ஜாமீனில் வெளிவர முடியாத வாரண்ட் பிறப்பிக்கப்பட்டது</td><td>ரத்து செய்யப்பட்ட தேதி</td></tr>
<tr><td colspan="2">A1 to A3 – 30.08.2024</td><td>24.10.2024</td></tr>
<tr><td>9.</td><td>அவர்களின் முடிவுகளுக்கு மேல் நீதிமன்றங்களால் பெறும் தடை</td><td colspan="3">இல்லை</td></tr>
</table>

இவ்வழக்கானது 06.03.2023 அன்று கோப்புக்கு எடுக்கப்பட்டு, என் முன்பாக 12.06.2026–ஆம் தேதியன்று இறுதியாக விசாரணைக்கு வந்ததில், அரசுத் தரப்பில் அரசு குற்றத்துறை உதவி வழக்குரைஞர், நிலை 2, அவர்கள் ஆஜராகியும், எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.O.வெங்கடாஜலபதி,B.A.,B.L., அவர்கள் ஆஜராகியும், சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்து இதுநாள் வரையில் என் சீரிய பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்.

R SANGEETHA SEKAR

Digitally signed by R SANGEETHA SEKAR
Date: 2026.06.12 18:20:38 +0530

## தீர்ப்புரை

இவ்வழக்கானது புகார்தாரர் குற்றவியல் விசாரணை முறைச்சட்டம் பிரிவு 173(2)–ன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட குற்ற இறுதி அறிக்கை கீழ் தாக்கல் செய்த வழக்காகும்.

2. அரசு தரப்பு வழக்கின் சுருக்கம்: –

இவ்வழக்கின் வாதி பெரியசாமி என்பவர் 16.05.2022 ந் தேதி காலை வழக்கம் போல் அவரது கொல்லைக்கு சென்றுள்ளார். அங்கு ஆஜர் 1வது எதிரி முத்துசாமி வாதியின் கொல்லையில் இருந்த நொங்கு மரத்திலிருந்து நொங்கை அறுத்து சாப்பிட்டுள்ளார். அதற்கு வாதி யான்டா என்னுடைய மரத்தில் நொங்கை அறுத்து தின்றன்று கேட்டுவிட்டு வாதி வெங்கடகிருஷ்ணாபுரம் மெயின் ரோட்டிற்கு வந்துள்ளார். அப்போது எதிரிகள் மூவரும் கையில் சவுக்கு குச்சியுடன் வந்து காலை 7.30 மணியளவில் மெயின் ரோட்டில் வந்த வாதியை வழிமறித்து, கையில் வைத்திருந்த சவுக்கு கட்டையால் தாக்கியுள்ளார்கள். அதில் வாதிக்கு தலையில் இடது புறம் சிதைந்த காயமும், பாதம் மற்றும் முதுகின் மேல்புறம் சிராய்ப்பு காயமும், தோள்பட்டையில் வலியும் ஏற்பட்டுள்ளது. எனவே எதிரிகள் மீது பிரிவுகள் 341, 324 இ.த.ச.–ன் படியும் தண்டிக்கத்தக்கது என்று கயர்லாபாத் காவல் நிலைய ஆய்வாளர் அவர்களால் இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. மேற்படி குற்ற இறுதியறிக்கையில் எதிரிகளுக்கு எதிராக முதல் தோற்ற வழக்கு எழுந்ததால், இந்நீதிமன்றத்தால் கடந்த 06.03.2023 ந் தேதி அழைப்பாணை அனுப்பப்பட்டது. எதிரிகள் முன்னிலையான பிறகு, 27.03.2023 ஆம் தேதி அவர்களுக்கு வழக்காவணங்களின் நகல் கு.வி.மு.ச.பிரிவு. 207–ன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டது. இருதரப்பு வாதங்களையும் கேட்டு போதிய கால அவகாசத்திற்கு பின்பு, 05.04.2023 ந் தேதி கு.வி.மு.ச. பிரிவு 240(1)–ன் படி 1 முதல் 3 எதிரிகள் மீதான பிரிவுகள் 341, 324 இ.த.ச.–ன் கீழ் குற்றச்சாட்டுகள் வனையப்பட்டு, கு.வி.மு.ச.240(2) பிரிவின் கீழ் எதிரிகளுக்கு குற்றச்சாட்டுகளின் சாராம்சங்கள் குறித்து விளக்கி கேள்வி கேட்டபோது, எதிரிகள் தாங்கள் குற்றவாளிகள் இல்லை என குற்றத்தை மறுத்து

R SANGEETHA SEKAR
Digitally signed by R SANGEETHA SEKAR
Date: 2026.06.12 18:20:45 +0530

சாட்சி விசாரணை வேண்டினர். பின்பு, வழக்கில் அரசு தரப்பு சாட்சிகளின் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

4. அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.5 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளனர். அ.த.சா.ஆ.1 முதல் அ.த.சா.ஆ.8 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. பட்டியல் சாட்சிகள் 3,6 அரசு தரப்பில் நீக்கரவு செய்யப்பட்டுள்ளார்கள். மேலும், எதிரிகள் தரப்பில் எவ்வித சாட்சிகளும் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

5. <u>அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியம்</u>

இவ்வழக்கின் புகார்தாரர் அ.சா.1 பெரியசாமி, எதிரிகள் மூவரும் தன்னை சவுக்கு கட்டையால் அடித்து கொலைமிரட்டல் விடுத்தது பற்றியும், சிகிச்சையில் இருந்த போது உதவி ஆய்வாளர் தன்னை விசாரித்தது பற்றியும் சாட்சியம் அளித்துள்ளார். அவர் மூலம் புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அ.சா.2 பழனிசாமி தனது அண்ணன் அ.சா.1 ஐ எதிரிகள் அடித்துக் கொண்டிருப்பதாக தனது அப்பா சொன்னதாகவும், சம்பவ இடம் சென்று அ.சா.1 மருத்துவமனைக்கு அழைத்து சென்றது பற்றியும், பார்வை மகசரில் கையொப்பம் செய்தது பற்றியும் சாட்சியம் அளித்துள்ளார். அவர் மூலம் பார்வை மகசர் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அ.சா.3 காமராஜ் என்ன சண்டை என்பதை நான் நேரில் பார்க்கவில்லை என்று சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.4 செங்கமுத்து பார்வை மகசரில் கையொப்பம் செய்தது பற்றி சாட்சியம் அளித்துள்ளார். அவர் மூலம் பார்வை மகசரில் உள்ள முதலாவது கையொப்பம் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அ.சா.5 கோவிந்தசாமி, காவல் உதவி ஆய்வாளர் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த பெரியசாமி என்பவரை விசாரணை செய்து வழக்கு பதிவு செய்தது பற்றியும், சம்பவ இடம் சென்று சாட்சிகள் முன்னிலையில் பார்வை மகசர், வரைபடம் தயார் செய்தது பற்றியும், அ.சா.1 க்கு சிகிச்சை அளித்த மருத்துவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தது பற்றியும், விசாரணை முடித்து இறுதி அறிக்கை தாக்கல் செய்தது பற்றியும் சாட்சியம் அளித்துள்ளார். அவர் மூலம் முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.4 ஆகவும், பார்வை மகசர் அ.சா.ஆ.5 ஆகவும், மாதிரி வரைபடம் அ.சா.ஆ.6 ஆகவும், விடுப்பு சான்று

R SANGEETHA SEKAR
Digitally signed by R SANGEETHA SEKAR
Date: 2026.06.12 18:20:52 +0530

அ.சா.ஆ.7 ஆகவும், விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று அ.சா.ஆ.8 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

6. இவ்வழக்கில் சாட்சிகள் விசாரணை முடிக்கப்பட்டபின் 11.06.2026 ஆம் தேதி எதிரிகளுக்கு பாதகமாக தோன்றும் அரசு தரப்பு சாட்சியம் குறித்து அவற்றை கேள்விகளாக தொகுத்து எதிரிகளுக்கு எடுத்துக்கூறி கு.வி.மு.ச.பிரிவு 313(1)(ஆ)–ன் கீழ் விளக்கிக் கூறி வினவியபோது எதிரிகள் பொய் சாட்சியம் என்று கூறினர். எதிரிகள் தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என்று தெரிவித்தனர். இருதரப்பு சாட்சிகள், விசாரணைகள் முடிக்கப்பட்டதால் இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது.

**7. <u>அரசு தரப்பு வழக்கறிஞர் வாதுரை</u>**

அரசு தரப்பில், இவ்வழக்கின் வாதி பெரியசாமி என்பவர் 16.05.2022 ந் தேதி காலை வழக்கம் போல் அவரது கொல்லைக்கு சென்றுள்ளார். அங்கு ஆஜர் 1 வது எதிரி முத்துசாமி வாதியின் கொல்லையில் இருந்த நொங்கு மரத்திலிருந்து நொங்கை அறுத்து சாப்பிட்டுள்ளார். அதற்கு வாதி யான்டா என்னுடைய மரத்தில் நொங்கை அறுத்து தின்றன்று கேட்டுவிட்டு வாதி வெங்கடகிருஷ்ணாபுரம் மெயின் ரோட்டிற்கு வந்துள்ளார். அப்போது எதிரிகள் மூவரும் கையில் சவுக்கு குச்சியுடன் வந்து காலை 7.30 மணியளவில் மெயின் ரோட்டில் வந்த வாதியை வழிமறித்து, கையில் வைத்திருந்த சவுக்கு கட்டையால் தாக்கியுள்ளார்கள். அதில் வாதிக்கு தலையில் இடது புறம் சிதைந்த காயமும், பாதம் மற்றும் முதுகின் மேல்புறம் சிராய்ப்பு காயமும், தோள்பட்டையில் வலியும் ஏற்பட்டுள்ளது. அதை அ.சா.1 முதல் அ.சா.5 வரை உள்ள சாட்சிகள் மற்றும் அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.8 வரையான சான்றாவணங்கள் மூலம் அரசு தரப்பு வழக்கு நிரூபிக்கப்பட்டுள்ளது. எனவே, எதிரிகள் தண்டிக்கப்படவேண்டும் என்று அரசு தரப்பு வழக்கறிஞரால் வாதிடப்பட்டது.

**8. <u>எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் வாதுரை:–</u>**

இவ்வழக்கில் எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் தனது வாதத்தில், சம்பவம் நடந்தது 16.05.2022 ந் தேதி புகார் அளிக்கப்பட்டது 27.05.2022 ந் தேதி. ஆனால் இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது 06.03.2023 ந் தேதி. சம்பவத்தை கண்ணுற்ற சாட்சி அ.சா.3 சண்டை நடந்ததை பார்க்கவில்லை என்று அரசு தரப்பிற்கு எதிராக சாட்சியம்

R SANGEETHA SEKAR
Digitally signed by R SANGEETHA SEKAR
Date: 2026.06.12 18:21:01 +0530

அளித்து பிறழ்சாட்சியாக கருதப்பட்டுள்ளார். பார்வை மகசர் சாட்சிகள் அ.சா.3, அ.சா.4 ஆகியோர் சம்பவ இடம் குறித்து முரண்பட்டு சாட்சியம் அளித்துள்ளார்கள். அ.சா.2 முதல் அ.சா.4 வரையுள்ள சாட்சிகள் எதிரிகள் அ.சா.1 ஐ சட்டவிரோதமாக வழிமறித்து, சவுக்கு கட்டையால் மண்டையில் அடித்து காயத்தை ஏற்படுத்தியது குறித்து அரசு தரப்பில் நிரூபிக்கப்படவில்லை. இந்த வழக்கின் எதிரிகள் மீது பொய்யாக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், புலன்விசாரணை அதிகாரி சரியாக புலன்விசாரணை செய்யாமல் எதிரிகள் மீது தவறாக இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், எனவே சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு அளித்து வழக்கிலிருந்து விடுதலை செய்யவேண்டும் என்று வாதிடப்பட்டது.

## தீர்வு

09. இவ்வழக்கில், இவ்வழக்கின் வாதி பெரியசாமி என்பவர் 16.05.2022 ந் தேதி காலை வழக்கம் போல் அவரது கொல்லைக்கு சென்றுள்ளார். அங்கு ஆஜர் 1 வது எதிரி முத்துசாமி வாதியின் கொல்லையில் இருந்த நொங்கு மரத்திலிருந்து நொங்கை அறுத்து சாப்பிட்டுள்ளார். அதற்கு வாதி யான்டா என்னுடைய மரத்தில் நொங்கை அறுத்து தின்றன்று கேட்டுவிட்டு வாதி வெங்கடகிருஷ்ணாபுரம் மெயின் ரோட்டிற்கு வந்துள்ளார். அப்போது எதிரிகள் மூவரும் கையில் சவுக்கு குச்சியுடன் வந்து காலை 7.30 மணியளவில் மெயின் ரோட்டில் வந்த வாதியை வழிமறித்து, கையில் வைத்திருந்த சவுக்கு கட்டையால் தாக்கியுள்ளார்கள். அதில் வாதிக்கு தலையில் இடது புறம் சிதைந்த காயமும், பாதம் மற்றும் முதுகின் மேல்புறம் சிராய்ப்பு காயமும், தோள்பட்டையில் வலியும் ஏற்பட்டுள்ளது என்பதே அரசு தரப்பு வழக்கு ஆகும். மேற்படி, எதிரிகள் மீதான குற்றச்சாட்டை அரசு தரப்பு எவ்வித சந்தேகத்திற்கும் இடமின்றி நிருபணம் செய்யப்பட்டுள்ளதா? என்பதை அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள், குறியீடு செய்யப்பட்ட சான்றாவணங்கள் ஆகியவற்றை ஆய்வு செய்ய வேண்டியுள்ளது.

10. இந்த வழக்கில் அ.சா.1 பெரியசாமி தனது நீதிமன்ற முதல் விசாரணையில், கடந்த 16.05.2022 அன்று காலை 7.30 மணிக்கு தான் வயலுக்கு சென்றதாகவும் தனது வயலில் உள்ள நுங்குமரத்திலிருந்து 1 வது எதிரி முத்துசாமி என்பவர் என் நுங்கை

R SANGEETHA SEKAR
Digitally signed by R SANGEETHA SEKAR
Date: 2026.06.12 18:21:09 +0530

திருடி தின்னுள்ளார் என்றும், அதை நான் கேட்டதற்கு நான் அப்படிதான் செய்வேன் உன்னால் முடிந்ததை பார் என்று சொன்னார் என்றும், பின்னர் இருசக்கர வாகனத்தில் மெயின் ரோட்டில் வந்துகொண்டிருந்த போது முத்துசாமி, வளர்மதி, வெங்கடாசலம் ஆகிய மூவரும் எனது வண்டியை மறித்து சவுக்கு கட்டையால் 3 பேரும் சேர்ந்து எனது தலையில் அடித்து எனக்கு தலையில் ரத்தகாயம் ஏற்பட்டது என்றும், முதுகில் இரத்தகட்டு ஏற்பட்டது என்றும், 3 பேரும் வெட்டிவிடுவேன், குத்திவிடுவேன் என கொலைமிரட்டல் விடுத்தார்கள், என்றைக்கு இருந்தாலும் உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என கொலைமிரட்டல் விடுத்தார்கள் என்றும், எனது தம்பி பழனிசாமி என்னை மருத்துவமனையில் சிகிச்சைக்காக கொண்டுவந்து சேர்த்தார் என்றும், நான் ஒருவாரம் மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்டேன் என்றும், சிகிச்சையில் இருந்தபோது உதவி ஆய்வாளர் வந்து விசாரித்தார் என்றும், என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான் என்றும், அந்த புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

11. அ.சா.1 தனது குறுக்குவிசாரணையில் கருப்பையா மனைவி பிச்சை என்பவர் வெற்றிலை பாக்கு எச்சிலை எனது இடத்தில் துப்பியதற்காக பிச்சை என்பவர் மீதும் அவர்களுக்கு சப்போட்டாக வந்த ஆஜர் எதிரிகள் மீதும் புகார் கொடுத்தேன் என்றால் சரிதான் என்றும், எதிரிகள் கொலைமிரட்டல் விடுத்த விபரத்தை போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன் என்றும், சாட்சியம் அளித்துள்ளார்.

12. அ.சா.2 பழனிசாமி தனது நீதிமன்ற முதல் விசாரணையில், கடந்த 16.05.2022 அன்று காலை 07.30 மணியிருக்கும் நான் வீட்டிலிருந்து வேலைக்கு கிளம்பிக்கொண்டிருந்தேன் எனது அப்பா என்னிடம் வந்து மெயின் ரோட்டில் பெரியசாமியை முத்துசாமி அவரது தந்தை வெங்கடாசலம் அவரது தாயார் வளர்பிறை ஆகியோர் சவுக்குகட்டையால் அடித்துக்கொண்டிருப்பதாக சொன்னார்கள் என்றும், உடனே நானும் எனது அப்பாவும் இருசக்கர வாகனத்தில் மெயின் ரோட்டிற்கு போனோம். அங்கு எனது அண்ணன் பெரியசாமியை எதிரிகள் மூவரும் சேர்ந்து

R SANGEETHA SEKAR
Digitally signed by R SANGEETHA SEKAR
Date: 2026.06.12 18:21:17 +0530

சவுக்குகட்டையால் அடித்துக்கொண்டிருந்தார்கள் என்றும், எனது அண்ணனுக்கு தலையில் ரத்தகாயம் ஏற்பட்டிருந்தது இடது கையில் காயம் ஏற்பட்டிருந்தது என்றும், உடனே எனது அண்ணனை நான் இருசக்கர வாகனத்தில் ஜீகேச்சுக்கு அழைத்து வந்தேன் என்றும், என்ன பிரச்சனை என அண்ணணிடம் கேட்டேன் என்றும், அதற்கு எனது அண்ணன் எதிரி முத்துசாமி நிலத்தில் உள்ள நுங்கு மரத்தில் நுங்கை திருடி தின்றுகொண்டிருந்தார் அதை ஏன் என கேட்டதற்கு இருவருக்கும் வாக்குவாதம் ஆகிவிட்டது என்றும், பின்னர் மெயின் ரோட்டிற்கு வந்துவிட்டார்கள் என்றும், மூவரும் சேர்ந்து அடித்து மண்டையை உடைத்துவிட்டதாக சொன்னார்கள் என்றும், என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள 2வது கையொப்பம் என்னுடையதுதான் என்றும், அந்த பார்வை மகசர் அ.சா.ஆ.2 என்றும், 27.05.2022 அன்று போலீசார் சம்பவ இடத்திற்கு வந்து விசாரித்தார்கள் என்றும், நடந்ததை சொன்னேன் சாட்சியாக கையெழுத்து போடசொன்னார்கள் என்றும், இன்னும் இருவர் கையொப்பம் செய்துள்ளார்கள் என்றும், போலீசார் என்னை விசாரித்தார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

13. அ.சா.2 தனது குறுக்குவிசாரணையில் அ.சா.1 எனது உடன்பிறந்த அண்ணன் என்றால் சரிதான் என்றும், முதல் விசாரணையில் கூறியவற்றைதான் போலீசார் விசாரித்தபோதும் சொன்னேனா என்றால் ஆமாம் என்றும், கொல்லையில் நடந்தது போனது வந்ததை எனது அண்ணன் சொன்னார் என்றால் சரிதான் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

14. அ.சா.3 காமராஜ் தனது நீதிமன்ற முதல் விசாரணையில், எதிரிகள் மற்றும் அ.சா.1 ஐ தெரியும், அனைவரும் என் ஊர்க்காரர்கள். அவர்களுக்குள் என்ன சண்டை என்பதை நான் நேரில் பார்க்கவில்லை என்றும், சுமார் 3 வருடங்களுக்கு முன்பு வெங்கடகிருஷ்ணாபுரம் மெயின் ரோட்டில் கூட்டமாக இருந்தது என்றும், நான் என்னவென்று பார்க்காமல் வீட்டிற்கு சென்றுவிட்டேன் என்றும், போலீசார் என்னை விசாரிக்கவில்லை என்றும் அரசு தரப்பிற்கு எதிராக சாட்சியம் அளித்து பிறழ்சாட்சியாக கருதப்பட்டுள்ளார்.

R SANGEETHA SEKAR
Digitally signed by R SANGEETHA SEKAR
Date: 2026.06.12 18:21:24 +0530

15. அ.சா.4 செங்கமுத்து தனது நீதிமன்ற முதல் விசாரணையில், கடந்த 16.05.2022 அன்று நான் காலை 7.30 மணிக்கு வீட்டிலிருந்து வேலைக்கு புறப்படும் போது அ.சா.1 இரத்தக்காயத்துடன் சட்டையில் இரத்த கறையுடன் வந்தார் என்றும், என்னவென்று கேட்டபோது எதிரிகள் மூவரும் தன்னை கட்டையால் வெங்கடகிருஷ்ணாபுரம் மெயின் ரோட்டில் தான் வரும்பேது அடித்துவிட்டதாக அ.சா.1 சொன்னார் என்றும், என் மகன் அரியலூர் மருத்துவமனைக்கு சென்று அங்கு ஒருவாரம் சிகிச்சையில் இருந்தார் என்றும், தற்போது தன்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள 1வது கையொப்பம் என்னுடையது தான் என்றும், 27.05.2022 அன்று காலை 7.00 மணியிலிருந்து 7.30 மணியிருக்கும் காவல்துறை அதிகாரி வெங்கடகிருஷ்ணாபுரம் மெயின்ரோட்டில் விசாரித்ததற்காக என்னிடம் சாட்சி கையொப்பம் வாங்கினார்கள் என்றும், பார்வை மகசரில் உள்ள அந்த முதலாவது கையொப்பம் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

16. அ.சா.4 தனது குறுக்குவிசாரணையில் என் மகன் சொல்லிதான் அடித்தார்கள் என்ற விபரத்தை தற்போது கூறினேன் என்றால் சரிதான் என்றும், என்றும், என் மகன் சொன்னதாக சொல்லும் சம்பவத்தை நான் நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான் என்றும், நான் கையொப்பம் போட்ட பேப்பரில் என்ன விபரம் எழுதியிருந்தது என்பது எனக்கு தெரியாது என்றால் சரிதான் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

17. அ.சா.5 கோவிந்தசாமி தனது நீதிமன்ற முதல் விசாரணையில் கடந்த 16.05.2022 ம் தேதி காலை 8.45 மணிக்கு நான் கயர்லாபாத் காவல்நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியிலிருந்த போது அரியலூர் அரசு மருத்துவமனையிலிருந்து வரப்பெற்ற தகவலை பெற்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த வெங்கடகிருஷ்ணாபுரம் கிராமத்தை சேர்ந் செங்கமுத்து மகன் பெரியசாமி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன் என்றும், பின்னர் காவல்நிலையம் வந்து மனு ரசீது எண்.138/2022 பதிவு செய்து மனு விசாரணைக்கு பின்னர் கயர்லாபாத் காவல்நிலைய குற்ற எண்.115/2022 இதச பிரிவு 341, 324 ன் கீழ் பதிவு செய்தேன்

R SANGEETHA SEKAR
Digitally signed by R SANGEETHA SEKAR
Date: 2026.06.12 18:21:31 +0530

என்றும், அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும், அன்றைய தினமே 18.30 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் செங்கமுத்து, பழனிச்சாமி ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தைப் பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் வரைபடம் தயார் செய்தேன் என்றும், பார்வை மகசர் அ.சா.ஆ.5 மற்றும் மாதிரி வரைபடம் அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும், பின்னர் சாட்சிகளான பெரியசாமி காமராஜ், ஐயப்பன், பழனிச்சாமி, செங்கமுத்து ஆகியோரை தனிதனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன் என்றும், பணிமாறுதல் காரணமாக வழக்கு கோப்பை உதவி ஆய்வாளர் திரு.முருகன் அவர்களிடம் ஒப்படைத்தேன் என்றும், அவர் தற்போது இறந்துவிட்டார் என்றும், 04.06.2022 அன்று எதிரிகள் முத்துசாமி, வெங்கடாச்சலம், வளர்பிறை ஆகியோரை 11.00 மணிக்கு வெங்கடகிருஷ்ணாபுரம் பேருந்து நிலையம் அருகே எதிரிகளை கைது செய்து நிலையம் அழைத்து வந்து திரேக பரிசேதனை செய்து எதிரிகளை தக்க பிணையில் விடுவித்துள்ளார் என்றும், காயம்பட்ட சாட்சிக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் திரு.பாண்டியன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து காயச்சான்று பெற்றுள்ளார் என்றும், விடுவிப்பு சான்று அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும், அவருக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என சான்று வழங்கியுள்ளார் என்றும், அந்த விபத்த பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும், பின்னர் 14.06.2022 அன்று புலன்விசாரணை முடித்து எதிரிகள் மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

18. அ.சா.5 தனது குறுக்கு விசாரணையில், சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் தேதி 16.05.2022 என்றால் சரிதான் என்றும், ஆனால் 27.05.2022 அன்று தான் முதல் தகவலறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான் என்றும், முதல் தகவலறிக்கையில் காலதாமதத்திற்கான காரணம் மனு ரசீது கொடுத்து விசாரணைக்கு பின்னர் வழக்கு பதிவு செய்யப்பட்டது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான் என்றும், முதல் தகவறிக்கையில் காலம் எண்.3–ல் தகவல் கிடைத்த நாள் 27.05.2022 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான் என்றும், முதல் தகவறிக்கை

R SANGEETHA SEKAR
Digitally signed by R SANGEETHA SEKAR
Date: 2026.06.12 18:21:38 +0530

நீதிமன்றத்திற்கு 06.06.2022 அன்று அனுப்பப்பட்டுள்ளது என்றால் சரிதான் என்றும், காலதாமதத்திற்கு காரணம் எதுவும் இறுதி அறிக்கையில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான் என்றும், அ.சா.1 புகார் வாக்குமூலம் அளித்தபோது இருசக்கர வாகனத்தில் சென்றபோது மறித்து அடித்தார்கள் என்று சொல்லவில்லை என்றால் சரிதான் என்றும், அ.சா.1 தனது 161 வாக்குமூலத்தில் எதிரிகள் தன்னை பார்த்து கொலை மிரட்டல் விடுத்தார்கள் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான் என்றும், அ.சா.1 தனது 161 வாக்குமூலத்தில் எதிரிகள் தன்னை பார்த்து என்றைக்காக இருந்தாலும் கொலை செய்யாமல் விடமாட்டேன் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான் என்றும், சாட்சியம் அளித்துள்ளார்.

19. புகார்தாரர் தன்னுடைய அ.சா.ஆ.1 புகார் மற்றும் 161 வாக்குமூலத்தில் சம்பவ தினத்தன்று எதிரி முத்துசாமி தனது நொங்குமரத்தில் நொங்கு அறுத்து சாப்பிட்டு கொண்டிருந்ததாகவும், அதனை கேட்டதற்கு, வெங்கடகிருஷ்ணா மெயின்ரோட்டில் எதிரிகள் மூவரும் தன்னை வழிமறித்து, சவுக்கு கட்டையால் மாறி மாறி தன்னை தலையிலும் முதுகிலும் அடித்ததாகவும் தனது இடது பக்க மண்டையில் ரத்தகாயம் ஏற்பட்டதாகவும், தனது தம்பி பழனிசாமி என்பவர் மூலம் அரியலூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்ந்ததாகவும், சிகிச்சையில் இருந்த போது போலீசார் விசாரணை செய்ததாகவும் குறிப்பிட்டுள்ளார். ஆனால் அ.சா.1 தனது நீதிமன்ற முதல் விசாரணையில் தனது புகார் மற்றும் 161 வாக்குமூலத்திற்கு முரணாக 3 பேரும் வெட்டிவிடுவேன், குத்திவிடுவேன் என கொலைமிரட்டல் விடுத்தார்கள். என்றைக்கு இருந்தாலும் உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என கொலைமிரட்டல் விடுத்தார்கள் என்று மிகைப்படுத்தி சாட்சியம் அளித்துள்ளார்.

20. மேலும் சம்பவம் நடந்தது 16.05.2022, அ.சா.1 கொடுத்த புகார் 11 நாள் காலதாமதமாக 27.05.2022 ந் தேதி காவல்நிலையத்தில் கொடுக்கப்பட்டுள்ளது. மேலும் இறுதி அறிக்கை காலதாமதமாக 06.03.2023 ந் தேதி நீதிமன்றத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. மேலும் இவ்வழக்கில் சம்பவத்தை கண்ணுற்ற சாட்சியான அ.சா.3 நீதிமன்ற முதல் விசாரணையில் எதிரிகள் மற்றும் அ.சா.1 ஐ தெரியும் என்றும், அனைவரும் என் ஊர்க்காரர்கள் என்றம், அவர்களுக்குள் என்ன சண்டை என்பதை

R SANGEETHA SEKAR
Digitally signed by R SANGEETHA SEKAR
Date: 2026.06.12 18:21:46 +0530

நான் நேரில் பார்க்கவில்லை என்றும், சுமார் 3 வருடங்களுக்கு முன்பு வெங்கடகிருஷ்ணாபுரம் மெயின் ரோட்டில் கூட்டமாக இருந்தது. நான் என்னவென்று பார்க்காமல் வீட்டிற்கு சென்றுவிட்டேன் என்றும், போலீசார் என்னை விசாரிக்கவில்லை என்றும் அரசு தரப்பிற்கு எதிராக சாட்சியம் அளித்து பிறழ்சாட்சியாக கருதப்பட்டுள்ளார். மேலும் அ.சா.1க்கு சிகிச்சை அளித்த மருத்துவரை அரசு தரப்பில் சாட்சியாக விசாரணை செய்யப்படவில்லை. எனவே அ.சா.ஆ.1 புகார் வாக்குமூலத்தை தொடந்து அ.சா.5 காவல் உதவி ஆய்வாளர் பதிவு செய்த அ.சா.ஆ.4 முதல் தகவல் அறிக்கையும், அரசு தரப்பில் நிரூபிக்கப்படவில்லை என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

21. சம்பவ இடத்தில் அ.சா.ஆ.5 பார்வை மகஜர், அ.சா.ஆ.6 மாதிரி வரைபடம் தயார் செய்தது பற்றி அ.சா.5 விசாரணை அதிகாரி சாட்சியம் அளித்துள்ளார். ஆனால், பார்வை மகஜர் சாட்சியான அ.சா.2 சம்பவதினத்தன்று வீட்டிலிருந்து வேலைக்கு கிளம்பிக் கொண்டிருந்த போது தனது அப்பா தன்னிடம் வந்து அ.சா.1ஐ எதிரிகள் சவுக்கு கட்டையால் அடித்துக் கொண்டிருப்பதாக சொன்னார் என்றும், போலீசார் 27.05.2022 அன்று சம்பவ இடத்திற்கு வந்து விசாரித்ததற்காக சாட்சியாக கையொப்பம் போடசொன்னார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார். மற்றொரு பார்வை மகசர் சாட்சியான அ.சா.4 வீட்டிலிருந்து வேலைக்குப் புறப்படும் போது அ.சா.1 இரத்தகாயத்துடன் வந்ததாகவும், என்னவென்று கேட்டபோது எதிரிகள் கட்டையால் வெங்கடகிருஷ்ணாபுரம் மெயின்ரோட்டில் வரும்போது அடித்துவிட்டதாக கூறியதாகவும், 27.05.2022 அன்று மாலை காவல்துறை அதிகாரி வெங்கடகிருஷ்ணாபுரம் மெயின்ரோட்டில் விசாரித்ததற்காக சாட்சி கையொப்பம் வாங்கினார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார். எனவே அ.சா.5 காவல் உதவி ஆய்வாளர் சம்பவ இடத்தில் மேற்படி சாட்சிகள் முன்னிலையில் பார்வை மகஜர், மாதிரி வரைபடம் ஆகியவற்றை தயார் செய்தார் என்பதும் குறித்தும், சம்பவ இடம் குறித்தும், அரசு தரப்பு சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்க தவறியதாக இந்நீதிமன்றம் கருதுகிறது.

22. அ.சா.1 தன்னுடைய புகார் மற்றும் 161 வாக்குமூலத்திற்கு முரணாக சாட்சியம் அளித்துள்ள நிலையில், சம்பவத்தை கண்ணுற்ற சாட்சி அ.சா.3 சம்பவத்தை நேரில்

R SANGEETHA SEKAR
Digitally signed by R SANGEETHA SEKAR
Date: 2026.06.12 18:21:54 +0530

பார்க்கவில்லை என்றும் அரசு தரப்பிற்கு எதிராக சாட்சியம் அளித்து பிறழ்சாட்சியாக கருதப்பட்டுள்ளார். பார்வை மகசர் சாட்சிகளான அ.சா.2, அ.சா.4 ஆகியோரும் முரண்பட்டு சாட்சியம் அளித்துள்ளார்கள். அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளான அ.சா.1 முதல் அ.சா.4 ஆகியோர் எதிரிகள் அ.சா.1 ஐ சட்டவிரோமாக வழிமறித்து, சவுக்கு குச்சியால் தலை மற்றும் முதுகில் அடித்து காயத்தை ஏற்படுத்தியது குறித்து முரண்பட்டு சாட்சியம் அளித்துள்ளார்கள்.

23. புகார்தாரரான அ.சா.1 கொடுத்த புகார் மற்றும் 161 வாக்குமூலத்திற்கு முரணாக நீதிமன்ற குறுக்கு விசாரணையில் கருப்பையா மனைவி பிச்சை என்பவர் வெற்றிலை பாக்கு எச்சிலை எனது இடத்தில் துப்பியதற்காக பிச்சை என்பவர் மீதும் அவர்களுக்கு சப்போட்டாக வந்த ஆஜர் எதிரிகள் மீதும் புகார் கொடுத்தேன் என்றால் சரிதான் என்றும் முரண்பட்டு சாட்சியம் அளித்துள்ள நிலையிலும், குற்றச் சம்பவத்திற்கு எதிரிகள் தான் காரணம் என்று தெளிவுபடுத்தப்படவில்லை. மேலும் புலன் விசாரணை முடித்து அதே பிரிவுகளின் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்ததாக சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.2, அ.சா.3, அ.சா.4 ஆகியோர் அ.சா.1ன் சாட்சியத்தை ஒத்துரைத்து சாட்சியம் அளிக்கவில்லை. எனவே மேற்கண்ட சாட்சிகளின் சாட்சியங்களின் அடிப்படையில் அ.சா.ஆ.1 புகார் குறித்து சந்தேகம் எழுகிறது.

24. இதச பிரிவு 341 –ஐ பொறுத்தவரை சட்டவிரோதமாக வழிமறித்தல் தண்டனைக்குரிய குற்றம் என்கிறது.

25. இதச பிரிவு 324 –ஐ பொறுத்தவரை அபாயகரமான ஆயுதத்தால் தன்னிச்சையாக சொற்பகாயம் விளைவித்தல் தண்டனைக்குரிய குற்றம் என்கிறது.

26. பொதுவாக குற்ற வழக்குகளில் நேரடி சாட்சியங்களை வைத்தும் வழக்கு சொத்து கைப்பற்றுவதிலிருந்தும் குற்றச்சாட்டு நிரூபணம் செய்யப்படும். இவ்வழக்கில் சம்பவத்தை கண்ணுற்ற சாட்சி மற்றும் பார்வை மகசர் சாட்சிகளின் சாட்சியங்கள் முன்னுக்கு பின் முரணாக உள்ளது. புகார்தாரர் தனது புகார் மற்றும் 161 வாக்குமூலத்திற்கு முரணாக சாட்சியம் அளித்துள்ளார். சம்பவத்தை கண்ணுற்ற சாட்சி சம்பவம் குறித்து முரண்பட்டு சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.2, அ.சா.3, அ.சா.4

R SANGEETHA SEKAR
Digitally signed by R SANGEETHA SEKAR
Date: 2026.06.12 18:22:06 +0530

ஆகியோர் அ.சா.1ன் சாட்சியத்தை ஒத்துரைத்து சாட்சியம் அளிக்கவில்லை. எனவே இவ்வழக்கில் அ.சா.ஆ.1 புகார் குறித்து சந்தேகம் எழுகிறது.

27. மேலும், எதிரிகள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் அரசு தரப்பு சாட்சிகள் குறித்து எழுப்பிய சந்தேகங்களுக்கு அரசு தரப்பில் எந்த விளக்கமும் அளிக்கப்படவில்லை. மேற்கூறிய அனைத்து சங்கதிகளினாலும், விவாதத்தின் மூலமும் அரசு தரப்பு வழக்கின் மீது சந்தேகம் எழுகிறது. எனவே, அரசு தரப்பில் எதிரிகள் மீது வனையப்பட்ட 1,2,3 எதிரிகள் மீதான பிரிவுகள் 341, 324 இ.த.ச.–ன் கீழான குற்றச்சாட்டுகளை நிரூபிக்க தவறிவிட்டதாக இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும் புலன்விசாரணை அதிகாரி அ.சா.1க்கு சிகிச்சை அளித்த மருத்துவரிடம் காயச்சான்று பெற்றதாக குறிப்பிட்டுள்ள நிலையில், அந்த மருத்துவரை இவ்வழக்கில் அரசு தரப்பில் சாட்சியாக விசாரணை செய்யவில்லை. அரசு தரப்பு சாட்சிகள் வழியாக எதிரிகள் மீதான குற்றத்தை உறுதிபடுத்தப்படவில்லை என்பதும் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபணம் செய்யப்படவில்லை என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது. ஆனால் இவ்வழக்கில் எதிரிகளுக்கு எதிரான குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படாததால் இவ்வழக்கில் சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு அளிக்கலாம் என இந்நீதிமன்றம் கருதுகிறது.

28. எனவே சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு வழங்குவதே நீதியின்பால் உகந்தது என்று கருதி சந்தேகங்களின் பலன் எதிரிகளுக்கு அளிக்கப்படுகிறது.

29. முடிவாக, 1,2,3 எதிரிகள் மீதான பிரிவுகள் 341, 324 இ.த.ச.–ன் கீழ் எதிரிகள் குற்றவாளிகள் இல்லை என தீர்மானித்து கு.வி.மு.ச.பிரிவு 248(1)–ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது. எதிரிகள் எழுதி கொடுத்த பிணை முறி ஆவணம் மேல் முறையீட்டு காலத்திற்கு பிறகு ரத்தாகவேண்டியுள்ளது. இவ்வழக்கில் வழக்குச் சொத்துக்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. எனவே வழக்குச் சொத்து பற்றிய உத்தரவு இல்லை.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை

R SANGEETHA SEKAR

Digitally signed by R SANGEETHA SEKAR
Date: 2026.06.12 18:22:13 +0530

திருத்தம் செய்யப்பட்டு பின்னர், 2026–ம் ஆண்டு ஜூன் மாதம் 12–ம் நாளான இன்று திறந்த இந்நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

R SANGEETHA SEKAR

Digitally signed by R SANGEETHA SEKAR
Date: 2026.06.12 18:22:20 +0530

நீதித்துறை நடுவர் எண்.I,
அரியலூர்.

**அரசு தரப்பு சாட்சிகள்** :–

| | | |
|---|---|---|
| 1. | அ.சா.1 | திரு.பெரியசாமி |
| 2. | அ.சா.2 | திரு.பழனிசாமி |
| 3. | அ.சா.3 | திரு.காமராஜ் |
| 4. | அ.சா.4 | திரு.செங்கமுத்து |
| 5. | அ.சா.5 | திரு.கோவிந்தசாமி, காவல் உதவி ஆய்வாளர் |

**அரசு தரப்பு சான்றாவணங்கள் :–**

| | | |
|---|---|---|
| 1. | அ.த.சா.ஆ.1 | புகார் வாக்குமூலம் |
| 2. | அ.த.சா.ஆ.2 | பார்வை மகசர் |
| 3. | அ.த.சா.ஆ.3 | பார்வை மகசரில் உள்ள அ.சா.4 ன் முதலாவது கையொப்பம் |
| 4. | அ.த.சா.ஆ.4 | முதல் தகவல் அறிக்கை |
| 5. | அ.த.சா.ஆ.5 | பார்வை மகஜர் |
| 6. | அ.த.சா.ஆ.6 | மாதிரி வரைபடம் |
| 7. | அ.த.சா.ஆ.7 | அ.சா.1 ன் விடுவிப்பு சான்று |
| 8. | அ.த.சா.ஆ.8 | அ.சா.1 ன் காயச்சான்று |

**அரசு தரப்பு சான்று பொருட்கள்**:– இல்லை.

**எதிரிகள் தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள் மற்றும் சான்று பொருட்கள்**:– இல்லை

R SANGEETHA SEKAR

Digitally signed by R SANGEETHA SEKAR
Date: 2026.06.12 18:22:26 +0530

**<u>பின்குறிப்பு</u>** :–

1. இவ்வழக்கின் சாட்சிகள் விசாரணைக்காக 3 தினங்களுக்கு மேலாக நிறுத்தி வைக்கப்படவில்லை.
2. வழக்கின் எதிரிகள் விசாரணையின் போது சிறையில் இல்லை.
3. வழக்கின் முடிவு குறித்து காவல் துறையினருக்கு அறிவிக்கப்பட்டது.

R SANGEETHA SEKAR Digitally signed by R SANGEETHA SEKAR Date: 2026.06.12 18:22:39 +0530

நீதித்துறை நடுவர் எண்.I,
அரியலூர்.